**இராணிப்பேட்டை நகராட்சி ஆணையர் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.ஜெ.வினாயகம், பிஎஸ்.சி.**

**ந.க.எண்.1038/2019 /எப்1.** **நாள்:21.02.2024.**

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – இராணிப்பேட்டை நகராட்சி – நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–D, பிளாக்–13, நகரளவு எண்.3/2–ல் 0.25 ஏக்கர் பரப்பில் அமையப்பெற்ற உத்தேச மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்தல் – தொடர்பாக.

பார்வை :

1. தங்களது 22.05.2018–ம் தேதிய விண்ணப்பம் (ம) மனைப்பிரிவுவரைப்படங்கள்.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1336/2018/எப்1, நாள்.05.06.2018–ம் தேதிய கடிதம்.(நகர் ஊரமைப்பு துறை, வேலூர் அவர்களுக்கு முகவரியிட்டது)
3. நகர் ஊரமைப்பு துறை, துணை இயக்குர், வேலூர் மண்டலம் அவர்களின் 08.05.2019ம் தேதிய கடிதம். ந.க.எண்.4015/2018/வேம3 .
4. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, உதவி இயக்குர்(பொ), இராணிப்பேட்டை அவர்களின் 21.02.2023ம் தேதிய கடிதம். ந.க.எண்.570/2022/ராமா .
5. தானப்பத்திர பதிவு எண்.221/2023 நாள்.18.05.2022.
6. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குனர் அவர்களின் 26/4/2023 ஆம் தேதியை கடித ந.க.எண்570/2022/ராமா
7. செலுத்துச் சீட்டு எண்கள்.031/031/1/23–24/0005646 (ம) 031/031/1/23–24/0003653.
8. நகராட்சி உள்ளுர் திட்டக்குழு பொருள் எண்.01 , நாள்.30.09.2022

***********

**உத்திரவு .**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–D, பிளாக்–13, நகரளவு எண்.3/2–ல் 0.25 ஏக்கர் பரப்பரப்பளவு கொண்ட இடத்தில் புதியதாக இரண்டு குடியிருப்பு மனைகளை கொண்ட மனைப்பிரிவு ஏற்படுத்தி பார்வை 3 மற்றும் 4–ல் காணும் நகர் ஊரமைப்பு துறை, துணை இயக்குனர், வேலூர் மண்டலம் அவர்களின் 08.05.2019–ம் தேதிய கடித ந.க.எண்.4015/2018/வேம3 மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குனர்(பொ), இராணிப்பேட்டை அவர்களின் 21.02.2023–ம் தேதிய கடித ந.க.எண்.570/2022/ராமா–ல் மனைப்பிரிவில் அமையவுள்ள சாலை மற்றும் புல்வெளி இடத்தினை குறியீட்டு சாலை வடிவமைப்புக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 5ல் காணும் தானப்பத்திர எண்ணில் சாலை மற்றும் புல்வெளி ஆகிய இடங்களை நகராட்சி ஆணையர் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டு

30.09.2022ம் தேதிய நகராட்சி உள்ளூர் திட்டக்குழு பொருள் எண்.01-ல் அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பார்வை 6ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குனர் அவர்களின் 26/4/2023 ஆம் தேதியை கடித ந.க.எண்570/2022/ராமா-ல் மேற்படி மனைப்பிரிவில் 2 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ(ராமா)எண்.46/2023 என எண்ணிட்டு உரிய நிபந்தனைகளுடன் மனை பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் பேரில், இம்மனை பிரிவிற்கான மனைப்பிரிவு ஆய்வுக் கட்டணம் ரூபாய்.5,000/-, அபிவிருத்தி கட்டணம் ரூபாய்.1,030/-, மனை அங்கீகார கட்டணம் ரூபாய்.23,000/-, மேற்பார்வை கட்டணம் ரூபாய்.5,000/-, வைப்புத் தொகை ரூபாய்.25,000/- ஆகியவை பார்வை 7-ன் படி நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளதின் பேரில் தங்களது 2 மனைகளைக் கொண்ட மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்பட்ட 13 நிபந்தனைகள் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அடிப்படையில் இறுதி உத்தரவு அளிக்கப்படுகிறது.

ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி

பெறுநர்.

திருமதி.அ.கலைச்செல்வி,
க/பெ.திரு.எஸ்.அருள்,
க.எண்.34,தென்றல் தெரு,
பெல்லியப்பா நகர்,
வாலாஜாபேட்டை-632513.

நகல் : 1. இராணிப்பேட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குனர், அவர்களின் தகவலுக்கு,
2. நகராட்சி பொறியாளர், தகவலுக்கு,
3. மேலாளர், தகவலுக்கு,
4. நகராட்சி இளநிலை பொறியாளர் (சாலை பதிவேட்டில் சாலை விவரத்தினை பதிவு செய்ய,
5. வருவாய் ஆய்வாளர் (2 மனைகளுக்கு காலி மனை வரிவிதிப்பு செய்து விவரம் சமர்ப்பிக்க).